DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிகண்டன் | Caste | : |
| Father Name | : மாரிமுத்து | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **27.01.2026.**

**PW - 9**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, பெருவளநல்லூரில் குடியிருக்கிறேன். மோட்டார் காயில் கட்டும் வேலை செய்கிறேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளைத் தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன பெரியசாமி எனக்கு பெரியப்பா முறை வேண்டும். அசா.1 குணசேகரன் பெரியசாமியின் மகன் ஆவார். அசா.2 காசியம்மாள் எனது பெரியம்மா. அசா.3 முருகன் மற்றும் அசா.4 சோலைமுத்து எனக்கு அண்ணன் முறை வேண்டும். எதிரிகளுக்கும் எனது பெரியப்பா பெரியசாமிக்கும் என்ன தகராறு என்றால் வாய் தகராறுதான். 1 ஆம் எதிரி தமிழ்செல்வனுக்கும், எனது பெரியப்பா பெரியசாமிக்கும் தேர்தல் பிரச்சனை இருந்தது. கடந்த 19.01.2020 அன்று எப்போதும்போல் எனது பெரியப்பா பெரியசாமி காலை புள்ளம்பாடி வாய்க்காலுக்கு குளிக்க போனார். காலை 07.00 மணி வரை அவர் வீட்டிற்கு வரவில்லை. அசா.1., 3, 4

ஆகியோருடன் நானும் சேர்ந்து என் பெரியப்பாவை வாய்க்காலுக்கு சென்று தேடினோம். ஆனால் அவர் கிடைக்கவில்லை. புள்ளம்பாடி வாய்க்கால் அருகே இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் வயதான நரைத்த தலை முடியுடன் கூடிய ஒரு நபர் இடங்கிமங்கலம் பாலம் அருகே மிதந்து செல்வதாக தகவல் சொன்னார்கள். நானும், அசா,1 முதல் 4 ஆகியோரும் மற்ற நண்பர்களுடன் அந்த இடத்திற்கு போனோம். அங்கு தீயணைப்பு துறையினரும் வந்தார்கள். நாங்களும், தீயணைப்பு துறையினரும் சேர்ந்து பிரேதத்தை மேலே தூக்கினோம். அவர் என் பெரியப்பா பெரியசாமிதான். அவர் இறந்திருந்தார், அவரது உடலில் கழுத்தருகே இரண்டு வெட்டுக்காயங்களும், இடது கையில் ஒரு வெட்டுக்காயமும், வலது விலாவில் ஒரு வெட்டுக்காயமும், நெஞ்சில் ஒரு கீறலும் இருந்தது. யாரோ கொன்றுவிட்டார்கள், கண்டுபிடித்து தருமாறு போலிஸ் விசாரித்தபோது சொன்னேன். இது சம்பந்தமாக தமிழ்செல்வனை கைது செய்ததாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனது பெரியப்பா உடலை தேடிச்சென்று கண்டுபிடித்தது மட்டும்தான் தெரியும், வேறு விபரங்கள் தெரியாது என்றால் சரிதான். என் பெரியப்பாவை யார் கொலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.